Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.68/2017

| | | |
|---|---|---|
| | | Prosecution PW1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | சந்திரசேகர் |
| Father's Name | : | மூக்கன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 20.01.2023

முதல் விசாரணை

நான் தற்போது ராதா தெரு, கரூரில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் பழனியப்பா தெருவில் குடியிருந்து டெக்ஸ் வேலைக்கு சென்று வந்தேன். நான் பழைய நாணயங்கள் சேகரித்து நாணயவியல் கழகம் சென்னை, திருச்சி, கோயமுத்தூர் ஆகிய இடங்களில் உறுப்பினராக உள்ளேன். 08.06.2013 ம் தேதிக்கு முதல்நாள் ஒரு நபர் என்னிடம் தொலைபேசி மூலம் என்னுடைய மொபைல் எண்ணான 8825890016 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு அந்த நபர், நானும் நாணயங்கள் சேகரித்து வருவதாகவும்,

s/d. K. Ambiga

சந்திரசேகர் நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

என்னை சந்திக்க வீட்டிற்கு வருவதாக சொன்னதன்பேரில் நானும் வீட்டிற்கு வரசொன்னேன். 08.06.2013 ம் தேதி காலை 8.30 முதல் 09.00 மணிக்குள் வீட்டிற்கு ஆட்டோவில் வந்தார். அப்போது நானும் நாணய சேகரிப்பாளர் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு என்னுடைய சேகரித்த நாணயத் தொகுப்பை காண்பிக்கும்படி கேட்டுக்கொண்டதின் பேரில் என்னுடைய சூட்கேஸில் இருந்து பிரிட்டிஷ் காலத்து வெள்ளி நாணயங்களான ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய், இரண்டனா நாணயம் மற்றும் பழைய காலத்து செம்பு, தங்க நாணயங்கள், 5 ம் ஜார்ஜ், 6 ம் ஜார்ஜ், காலத்து 1 ரூபாய், 5 ரூபாய் பணத்தாள்கள், சுதந்திர இந்தியா காலத்திய பணத்தாள்களாள 1 ரூபாய், 2 ரூபாய், 5 ரூபாய், இராஜராஜ சோழன் படம் போட்ட ஆயிரம் ரூபாய் தாள்கள்-2, அது அல்லாமல் 1 ரூபாய் பண்டல், 2 ரூபாய் பண்டல், 5 ரூபாய் பண்டல் ஆகியவற்றை அந்த நபரிடம் காண்பித்தேன்.

அந்த நபர் என்னிடம் தன்னுடைய பெயர் கிருஷ்ணமூர்த்தி என கூறினார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317 பிரிவின் கீழ் மனுதாக்கல் செய்துள்ளார். எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். ரிசர்வ் வங்கி ப்ரூப் காயின்கள் ஆயிரம் ரூபாய் காசு, 100 ரூபாய் காசு, 150 ரூபாய் விவேகானந்தர் படம் போட்ட காசு, ஆக மொத்தமாக 7 காயின்கள் அந்த சில காயின்களுக்கு ரசீது உள்ளது. இவற்றை கிருஷ்ணமூர்த்தியிடம் காண்பித்தேன். அன்றைய தினம் வேலை நிமித்தம் காரணமாக நான் வேலைக்கு நிமித்தம் காரணமாக செல்லவேண்டும் என்று சொன்னபோது கிருஷ்ணமூர்த்தி தானும் கடைவீதிக்கு செல்லவேண்டும் என்று சொன்னதன் பேரில் நாங்கள் இருவரும் சென்றுவிட்டோம். மதியம் சுமார் 1.30 மணியளவில் வீட்டிற்கு சென்றபோது எனது மகள்கள் யாழினி, பவித்ரா இருவரும் மீண்டும் வீட்டிற்கு வந்து, நான் அந்த நாணயத் தொகுப்புகளை வாங்கி வருவதாக சொல்லி என் பிள்ளைகளை ஏமாற்றி வெளியே ஒரு நபர் ஆட்டோவில் காத்துக்கொண்டிருக்கிறார், அவரை அழைத்து வர என் பிள்ளைகளை அனுப்பிவிட்டு நான் சேகரித்துவைத்திருந்த நாணயத் தொகுப்புகளை எடுத்துச் சென்றுவிட்டதாகவும் கூறினார்கள். நான் அவருடைய செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டபோது Switch of என வந்தது. பிறகு இது சம்மந்தமாக நான் வெங்கமேடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். போலிசார் எனக்கு மனு ரசீது கொடுத்தனர். அதன் பிறகு நான் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்ய மனுத்தாக்கல் செய்தேன். அதன் பிறகுதான் வெங்கமேடு காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்தனர். என்னிடம் காட்டப்படும்

s/d. K. Ambiga

சந்திரசேகர் நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த புகார் அ.சா.ஆ-1 ஆகும். 2015 டத வருடம்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பழைய நாணயங்களின் தொகுப்பின் மதிப்பு பத்து வருடங்களுக்கு முன்னரே சுமார் நான்கு இலட்சங்கள் இருக்கும் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d. K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

சந்திரசேகர்

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.68/2017

| | | |
|---|---|---|
| | | Prosecution PW2 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | யாழினி |
| Father's Name | : | சந்திரசேகர் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 20.01.2023

**முதல் விசாரணை**

நான் தற்போது ராதா தெரு, கரூரில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் பழனியப்பா தெருவில் குடியிருந்து தற்போது திருப்பூரில் எனது கணவர் வீட்டில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா ஆவார். எனது அப்பா பழைய நாணயங்கள் சேகரித்து நாணயவியல் கழகம் சென்னை, திருச்சி, கோயமுத்தூர் ஆகிய இடங்களில் உறுப்பினராக உள்ளார். 08.06.2013 ம் தேதிக்கு முதல்நாள் ஒரு நபர் எனது அப்பாவிடம் தொலைபேசி மூலம் என்னுடைய மொபைல் எண்ணான 8825890016

s/d. K. Ambiga

யாழினி நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு அந்த நபர், நானும் நாணயங்கள் சேகரித்து வருவதாகவும், என் அப்பாவை சந்திக்க வீட்டிற்கு வருவதாக சொன்னதன்பேரில் எனது அப்பாவும் வீட்டிற்கு வரசொன்னார். 08.06.2013 ம் தேதி காலை 8.30 முதல் 09.00 மணிக்குள் வீட்டிற்கு ஆட்டோவில் வந்தார். அப்போது எனது அப்பாவும் நாணய சேகரிப்பாளர் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு என்னுடைய சேகரித்த நாணயத் தொகுப்பை காண்பிக்கும்படி கேட்டுக்கொண்டதின் பேரில் என் அப்பாவின் சூட்கேஸில் இருந்து பழைய காலத்து தங்கம், பித்தளை, வெள்ளி நாணயங்கள், பணத்தாள்கள், போட்டோ ஆல்பம் ஆகியவற்றை அவரிடம் காண்பித்தார். அச்சமயம் நானும் எனது தங்கை பவித்ராவும், எனது அம்மாவும் அங்கு இருந்தோம். வந்தவர் தன்னுடைய பெயர் கிருஷ்ணமூர்த்தி என கூறினார். அன்றைய தினம் எனது அப்பா (அ.சா.1)ம் எனது அம்மாவும் வேலை நிமித்தம் காரணமாக செல்லவேண்டும் என்று சொன்னபோது கிருஷ்ணமூர்த்தி தானும் கடைவீதிக்கு செல்லவேண்டும் என்று சொன்னதன் பேரில் எனது அப்பாவும், கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் சென்றுவிட்டார்கள்.

பிறகு சுமார் காலை 10.30 மணியளவில் கிருஷ்ணமூர்த்தி என்பவர் மட்டும் தனியாக வீட்டிற்கு வந்து வீட்டில் வைத்திருந்த பேக்கை எடுப்பதாக வந்தவர், என்னையும் எனது தங்கையும் வீட்டிற்கு வெளியே செல்லும்படியும், அங்கு கார் ஒன்று வருவதாகவும் அதை பார்க்கும்படி சொன்னதன் பேரில் அவரும் ஐந்து நிமிடத்தில் அவரும் எனது அப்பா வைத்திருந்த பழைய காயின்ஸ்களை எடுத்துக்கொண்டு வெளியே வந்து ஆட்டோவில் சென்றுவிட்டார். மதியம் சுமார் 1.30 மணியளவில் எனது அப்பா வீட்டிற்கு வந்து காயின்ஸ்களை பார்த்தபோது காயின்ஸ்கள் இல்லை. அதை கிருஷ்ணமூர்த்தி எடுத்துச் சென்றுவிட்டதாக அதன்பிறகுதான் தெரியவந்தது. கிருஷ்ணமூர்த்தி இன்று ஆஜர் இல்லை. பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். போலிசார் என்னை விசாரித்தனர். நாணயங்களின் மதிப்பு சுமார் 3, 4 இலட்சம் இருக்கும்.

**குறுக்கு விசாரணை**

இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**யாழினி**

s/d. K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.68/2017

| | | |
|---|---|---|
| | | Prosecution PW3 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | பவித்ரா |
| Father's Name | : | சந்திரசேகர் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 20.01.2023

**முதல் விசாரணை**

நான் தற்போது ராதா தெரு, கரூரில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் பழனியப்பா தெருவில் குடியிருந்து தற்போது கல்லூரி படித்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா ஆவார். எனது அப்பா பழைய நாணயங்கள் சேகரித்து வந்தார். 08.06.2013 ம் தேதி காலை எனது அப்பாவிற்கு போன் மூலம் ஒரு நபர் தொடர்பு கொண்டு பழைய நாணயங்களை பார்ப்பதற்கு வருவதாக சொல்லி காலை சுமார் 9 மணியளவில் எங்கள் வீட்டிற்கு வந்தார். அவர் தன்னுடைய பெயர் கிருஷ்ணமூர்த்தி என

s/d. K. Ambiga

**பவித்ரா** நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

கூறினார். அ.சா.1 ஆன எனது அப்பா அவரிடம் பழைய நாணயங்களை எடுத்து காண்பித்தார். பிறகு எனது அப்பா கிருஷ்ணமூர்த்தியை கடைவீதியில் விட்டுவிட்டு வேலைக்கு சென்றுவிட்டார். அதே நாள் காலை சுமார் 10-10.30 மணியளவில் கிருஷ்ணமூர்த்தி வீட்டிற்கு வந்தார். அவர் எங்களிடம் ஐநூறு ரூபாய் கொடுத்து சில்லறை மாற்றும்படி கூறினார். சில்லரை கிடைக்காததால் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன், பிறகு மீண்டும் அவர் தன்னை அழைத்துச் செல்ல கார் வருவதாகவும், அதை வெளியே சென்று பார்க்கும்படி என்னையும் எனது அக்காவையும் சொல்லிவிட்டு நாங்கள் வருவதற்குள் ஆட்டோவில் ஏறி சென்றுவிட்டார். மதியம் சுமார் 1.30 மணியளவில் என் அப்பா சாப்பிட வந்தார். பிறகு என் அப்பா நாணயம் வைத்திருந்த சூட்கேஸை எடுத்து பார்த்தபோது அதில் இருந்த நாணயங்கள் இல்லை. அவர் வாங்கி வந்திருந்த ஸ்வீட் கவரில் இருந்த கடை ஆதி ஸ்வீட் கடைக்கு சென்று விசாரித்ததில் அவர் போட்டோ தெரியவந்தது. அதன் பிறகு எனது அப்பா வெங்கமேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார். கிருஷ்ணமூர்த்தி இன்று ஆஜர் இல்லை. பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். நாணயங்களின் மதிப்பு சுமார் 3, 4 இலட்சம் இருக்கும்.

**குறுக்கு விசாரணை**

இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**பவித்ரா**

s/d. K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.68/2017

| | | |
|---|---|---|
| | | Prosecution PW4 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | விமலா |
| Father's Name | : | க/பெ. சந்திரசேகர் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 20.01.2023

**முதல் விசாரணை**

நான் தற்போது ராதா தெரு, கரூரில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் பழனியப்பா தெருவில் குடியிருந்து வந்தோம். கரூர் பஸ் நிலையத்தில் பேன்ஸி கடை வைத்துள்ளேன். அ.சா.1 சந்திரசேகர் எனது கணவர் ஆவார். எனது கணவர் பழைய நாணயங்களை சேகரித்து வைத்திருக்கும் பழக்கம் உடையவர். 08.06.2013 ம் தேதி கிருஷ்ணமூர்த்தி என்பவர் காலை சுமார் 8-8.30 மணியளவில் வீட்டிற்கு வந்து பழைய நாணயங்களை பார்ப்பதாக சொன்னார். அப்போது நான் இருந்தேன். நாணயங்களை

s/d. K. Ambiga

**விமலா** நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

எனது கணவர் கிருஷ்ணமூர்த்தி என்பவரிடம் காட்டினார். அதன் பிறகு எனது கணவர் கிருஷ்ணமூர்த்தியை கடைவீதியில் கொண்டுபோய் விட்டுவிட்டு அவரும் வேலைக்கு சென்றுவிட்டார். நானும் வேலைக்கு சென்றுவிட்டேன். பிறகு மதியம் 1.30 மணியளவில் எனது கணவர் வீட்டிற்கு சென்று பார்த்தபோது நாணயங்களை காணவில்லை. இது சம்மந்த எனது கணவர் வெங்கமேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார். கிருஷ்ணமூர்த்தி இன்று ஆஜர் இல்லை. பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். நாணயங்களின் மதிப்பு சுமார் 3 இலட்சம் இருக்கும்.

**குறுக்கு விசாரணை**

இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**விமலா**

s/d. K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.